South West London
Health & Care
Partnership

# கனெக்டிங்
# யுவர் கேர்

தென்மேற்கு லண்டன் முழுவதும் உங்கள் பராமரிப்பை இணைப்பதற்கான வழியை நாங்கள் மேம்படுத்தி வருகிறோம். விரைவில், உடல்நல மற்றும் பராமரிப்பு வல்லுநர்கள் இதர NHS சேவைகளிலிருந்து உங்கள் பதிவேடுகளை அணுகுவதற்கான தேவை எழும்போது அவர்களால் அதைச் செய்ய முடியும். நீங்கள் உங்கள் GPயிடமோ அல்லது மருத்துவமனைக்கோ செல்லும்போது உங்கள் வேலை விரைவாகவும் எளிதாகவும் முடிய உங்களுக்கு உதவும்.

## கனெக்டிங் யுவர் கேர் எனக்கு எப்படி உதவக்கூடும்?

கனெக்டிங் யுவர் கேர் (Connecting your Care) என்பது உங்களுடைய கவனிப்பில் ஈடுபட்டுள்ள உங்கள் GP, மருத்துவமனையின் மருத்துவர்கள் அல்லது பங்கேற்கும் மருத்துவமனையைச் சார்ந்த செவிலியர்கள் (கிராய்டன் ஹெல்த் சர்வீசஸ் NHS டிரஸ்ட், செயின்ட் ஜார்ஜ் ஹெல்த்கேர் NHS டிரஸ்ட் மற்றும் செயின்ட் ஹீலர் யூனிவர்சிட்டி ஹாஸ்பிடல்) போன்றோர் ஒரு பாதுகாப்பான அமைப்பு வாயிலாக உங்களைப் பற்றிய முக்கியமான தகவல்களைப் பார்க்க முடியும். இது அவசரகால சூழ்நிலைகளில் உங்கள் உயிரைப் பாதுகாக்க உதவக்கூடிய, உங்கள் கவனிப்பு பற்றிய மிகச் சிறந்த முடிவுகளை எடுக்க அவர்களுக்கு உதவும்.

எதிர்காலத்தில், உங்களுக்காக ஒரு மிக விரிவான பராமரிப்புப் பதிவேட்டைப் பகிர்ந்துகொள்ள இதர உடல்நல மற்றும் சமூகப் பராமரிப்பு வழங்குநர்களுடன் நாங்கள் இணைந்து செயல்படுவோம். இதில் சமுதாய NHS சேவைகள், மனநலச் சேவைகள் மற்றும் சமூகப் பராமரிப்புச் சேவைகளிலிருந்து நீங்கள் பெறுகின்ற சிகிச்சையும் உள்ளடங்கும். இது உங்கள் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள அனைவரும் உங்கள் சிகிச்சைக்கான மிகச் சிறந்த முடிவுகள் எடுப்பதற்கு உதவும்.

## என்ன பலன்கள் கிடைக்கின்றன?

- நீங்கள் உங்கள் வரலாற்றை எங்களிடம் ஒருமுறை சொன்னால் போதும்
- தேவையற்ற அல்லது மீண்டும் மீண்டும் நிகழக்கூடிய முன்பதிவுச் சந்திப்புகளையும் பரிசோதனைகளையும் நீங்கள் தவிர்த்துக்கொள்ளலாம்
- முக்கியமான தகவல்களை உங்களைப் பராமரிக்கின்ற நபர் உடனடியாகப் பார்க்க முடியும்
- கிடைக்கின்ற கூடுதல் தகவல்களைக் கொண்டு உங்கள் பராமரிப்பு பற்றிய முடிவுகளை மிக விரைவாக எடுக்க முடியும்.

## எந்தெந்த தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படும்?

பகிர்ந்துகொள்ளப்படும் தகவல்கள் இவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்:

- பெயர், முகவரி மற்றும் NHS எண்
- முன்பதிவுச் சந்திப்புகள் மற்றும் மருத்துவமனை வருகைகள்
- நோயறிதல், மருந்துகள் மற்றும் ஒவ்வாமைகள் உள்ளிட்ட முக்கியமான மருத்துவ வரலாறு
- இரத்தப் பரிசோதனைகள் மற்றும் எக்ஸ்-ரேக்கள் போன்ற பரிசோதனை முடிவுகள்

## எந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்பட மாட்டாது?

பாலியல் சுகாதாரம், உதவிபெற்ற கருத்தரித்தல் மற்றும் தத்தெடுப்பு சார்ந்த பதிவேடுகள் போன்ற சில தகவல்கள் மிகவும் உணர்வுப்பூர்வமானதாகவும் சட்டத்தால் தடை செய்யப்பட்டதாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்பட மாட்டாது.

## எனது தகவல்கள் பாதுகாப்பானதாக இருக்குமா?

உங்கள் தகவல்கள் அவற்றைச் சேகரித்துள்ள உடல்நல மற்றும் சமூகப் பராமரிப்பு நிறுவனங்களின் சிஸ்டங்களில் தொடர்ந்து பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்படும். கனெக்டிங் யுவர் கேர் (Connecting your Care) பார்வையாளர்களுக்கான பகுதியில் எந்தத் தகவல்களும் வைக்கப்பட மாட்டாது.

உங்களைப் பற்றிய தகவல்கள் தரவுப் பாதுகாப்புச் சட்டம் 2018 இன் கீழ் பாதுகாக்கப்படுகின்றன. இதற்காக உடல்நல மற்றும் சமூகப் பராமரிப்பு வல்லுநர்கள்:

- உங்களுக்குத் தேவைப்படுகின்ற பராமரிப்பை வழங்குவதற்காக உங்களைப் பற்றிய தகவல்களை மட்டும் பார்க்க முடியும்
- உங்கள் பதிவேடுகளைக் கட்டாயமாக பத்திரமாக வைத்திருக்க வேண்டும்
- நம்பிக்கையுடன் பணிபுரிய வேண்டும்

அதோடு, எல்லா நிறுவனங்களும் பொது தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதி (GDPR) 2016 –இன் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்றன, அதாவது உங்கள் தகவல்களுக்கும், அவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்கும் அவை பொறுப்பிற்குரியவை ஆகும்.

உங்களைப் பற்றிய தகவல்கள் தனியார் நிறுவனங்களுடன் பகிர்ந்துகொள்ளப்பட மாட்டாது அல்லது அவை விற்பனை செய்யப்பட மாட்டாது.

## என்னைப் பற்றிய தகவல்களை யாரெல்லாம் பார்க்க முடியும்?

உங்கள் பராமரிப்பில் நேரடியாக ஈடுபட்டுள்ள நபர்கள் மட்டுமே, நீங்கள் அவர்களைப் பார்க்கின்ற நேரத்திலும் அந்த இடத்திலும், அல்லது அவர்கள் உங்களைப் பார்க்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது அல்லது முடிவுகள், மருத்துவக் கடிதங்கள் ஆகியவற்றின் தொடர்கவனிப்பை மேற்கொள்ளும்போது அல்லது பின்தொடர் கவனிப்பை வழங்கும்போது மட்டுமே பார்க்க முடியும். இது உங்கள் GP ஆகவோ அல்லது பயிற்சிச் செவிலியராகவோ அல்லது மருத்துவமனையின் மருத்துவர்கள் அல்லது செவிலியர்களாகவோ இருக்கலாம், அவர்களுடன் உங்கள் முன்பதிவுச் சந்திப்புக்கும் பராமரிப்புக்கும் ஏற்பாடு செய்கின்ற நிர்வாகிகளும் அதைப் பார்க்க முடியும்.

## எனக்கு தேர்ந்தெடுப்பதற்கான சாத்தியம் இருக்கிறதா?

இந்த வழியில் தகவல்களைப் பகிர்ந்துகொள்வது உங்களுக்குப் பிடித்திருந்தால், நீங்கள் வேறு எதுவும் செய்யத் தேவையில்லை. கனெக்டிங் யுவர் கேர் (Connecting your Care) அமைப்பு அடுத்த சில மாதங்களில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

## நான் விலக விரும்பினால் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால், **www.swlondon.nhs.uk/connectingyourcare** ஐப் பார்வையிட்டு, விலகுவதற்கான படிவத்தைப் பதிவிறக்கம் செய்து அதைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் இதிலிருந்து விலகிக்கொள்வதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது.

பங்கேற்கும் மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றில் நோயாளி ஆலோசனை மற்றும் தொடர்பு சேவைகள் (PALS) பிரிவைச் சேர்ந்த உங்கள் பயிற்சி GP-யிடம் இருந்தும் விலகுவதற்கான படிவத்தை நீங்கள் பெறலாம்:

- Croydon Health Services NHS Trust
- Epsom & St Helier University Hospital
- St George’s Healthcare NHS Trust
- Kingston Hospital NHS Foundation Trust

விலகுவதனால் உங்கள் தகவல்கள் இப்பொழுது பகிரப்படுகின்ற அதே வழியில் – தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல் அல்லது கடிதம் மூலம் - தொடர்ந்து பகிரப்படும். ஆனால், இதைச் சேகரிப்பதற்கு சிறிது காலம் எடுத்துக்கொள்ளலாம் மற்றும் கனெக்டிங் யுவர் கேர் (Connecting your Care) வாயிலாக மின்னணு முறையில் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கான பலன்களை நீங்கள் பெற முடியாமல் போகலாம்.

அதாவது, உங்களைப் பராமரிக்கும் நபர் உங்களை மதிப்பிடும்போது உங்கள் முழுமையான வரலாறு அவர்களுக்குக் கிடைக்காமல் போகலாம் மற்றும் உங்கள் பராமரிப்பு பற்றிய முடிவுகளை எடுப்பதற்கு நேரம் எடுத்துக்கொள்ளலாம்.

கனெக்டிங் யுவர் கேர் (Connecting your Care) அமைப்பிலிருந்து வெளியேறுவது எந்த வகையிலும் தேசிய தரவு விலகலுடன் அல்லது வேறு ஏதாவது தரவுப் பகிர்வு ஒப்பந்தங்களுடன் இணைக்கப்பட மாட்டாது.

## கூடுதலான தகவல்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

கூடுதலான தகவல்களைத் தெரிந்துகொள்ள பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடுங்கள்:
**www.swlondon.nhs.uk/connectingyourcare**

**connectingyourcare@swlondon.nhs.uk**

**0203 668 3100**

**Freepost SWL CONNECTING YOUR CARE**